கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண்.198/2023 வா.சா.1 முருகேசன்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 10.03.2026

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி

7) என் தந்தைக்கு உடன் பிறந்தவர்கள் யார் யார் என்றால் அவருக்கு 2 சகோதார்களும், ஒரு சகோதரியும் உள்ளனர். என் தந்தையும் சித்தப்பாக்களும் குடும்ப சொத்துக்களை பாகம் செய்து கொண்டனர் என்றால் சரிதான். என் சித்தப்பாக்களுக்கு ஒதுக்கப்பட்ட பாகங்களை தான் என் தந்தை கிரையம் பெற்றார் என்றால் சரிதான். அச்சொத்துக்களை தான் என் அக்காவிற்கு ஆயுள் பாத்தியமாகவும் அதன் பின்னிட்டு எனக்கு பாத்தியம் ஆகும் படி என் தந்தை உயில் எழுதினார் என்றால் சரிதான். என் அக்கா காலமாகிவிட்டார் என்றால் சரிதான். எனவே அச்சொத்துக்கள் எனக்கு பாத்தியப்பட்டு எனது அனுபவத்தில் உள்ளன என்றால் சரிதான். அச்சொத்துக்களும் வழக்கு சொத்தும் அடுத்து அடுத்து உள்ள சொத்துக்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்து அச்சொத்துகளுக்கு மேல் புறம் உள்ளது.

8) வழக்கு சொத்து மொத்த பரப்பளவு என்ன என்றால் 709 சதுரடி ஆகும். மேற்படி உயில் சொத்துக்கள் பரப்பளவு என்ன என்றால் அது சுமார் 1300 சதுரடிக்கு மேல் இருக்கும். என் தந்தை உயிருடன் இருந்த வரை அவரது அனைத்து சொத்துக்களையும் குடும்ப தலைவர் என்ற முறையில் அவரே அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். என் தந்தை குடும்ப தலைவர் என்ற முறையில் தான் என் அக்காவிற்கு ஆயுள் பாத்தியமாகவும் அதன் பின்னிட்டு எனக்கு பாத்தியம் ஆகும் படி என் தந்தை 07-07-2003 அன்று பதிவு செய்யப்பட்ட உயில் எழுதினார் என்றால் சரிதான்.

9) அவரது சொத்துக்களில் மேற்படி உயிலில் கட்டுப்படாத மீத சொத்து தான் வழக்கு சொத்து என்றால் சரிதான். வழக்கு சொத்தை தான் என் தந்தை 13-01-2017 அன்று பிரதிவாதிக்கு ஆதரவாக உயில் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. அது போலி உயில் ஆகும். எதன் அடிப்படையில் அது போலி உயில் என கூறுகிறேன் என்றால் என் தந்தை இறுதி காலம் வரை என்னுடன் தான் இருந்தார் அவர் 13-01-2017 தேதியிட்ட உயிலை ஏற்படுத்தவில்லை அவ்வாறு உயில் ஏற்படுத்தினால் பதிவு செய்வேன் என என்னிடமும் என் அக்காவிடமும் என் தந்தை கூறியிருந்தார். அவ்வாறு எனில் என் தந்தைக்கு வழக்கு சொத்து பொருத்து உயில் எழுதும் எண்ணம் இருந்தது என்றால் சரியல்ல.

10) 07-07-2003 அன்று பதிவு செய்யப்பட்ட உயிலை யாரை அழைத்து சென்று என் தந்தை பதிவு செய்தார் என்றால் என் அக்காவையும் , மேலும் அவருக்கு தெரிந்த படித்த இருவரை அழைத்து சென்று ஆனைமலை சார்பதிவகத்தில் பதிந்தார். 07-07-2003 உயிலை பதிவுசெய்த போது என்னிடம் கூறியிருந்தாரா என்றால் இல்லை. பொதுவாக குடும்ப தலைவர் தனது அனைத்து பிள்ளைகளுக்கும் தன் சொத்தை பங்கிட்டு கொடுக்கவே விரும்புவார் என்றால் சரிதான். அந்த அடிப்படையில் ஏற்கனவே எனக்கு 2003 உயிலில் சொத்து கொடுத்து இருந்ததால் வழக்கு சொத்தை பொருத்து பிரதிவாதிக்கு 2017 உயில் ஏற்படுத்தி இருந்தார் என்றால் சரியல்ல.

11) இறக்கும் வரை என் தந்தையை பார்த்துக் கொண்டதாக நான் கூறும் நிலையில் அதற்காக ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தந்தை இறக்கும் வரை வழக்கு சொத்தில் தான் வசித்தார் என்றால் சரிதான். என் தந்தை இறந்த பின்பு பிரதிவாதி வழக்கு சொத்தில் வசித்தார் என்றால் என் தாயார் தான் அங்கு வசித்தார். என் தாயார் இறப்பிற்கு பின் நாளது தேதி வரை பிரதிவாதி தான் அங்கு வசிக்கிறார் என்றால் சரிதான்.

நாங்கள் இருவரும் அங்கு புழங்குகிறோம். வழக்கு சொத்தும் , 2003 உயில் சொத்தும் ஒரே சுற்றுச்சுவருக்குள் அமைந்துள்ளதால் இருவரும் புழங்குவதாக கூறுகிறேன் என்றால் சரிதான்.

12) என்னுடைய சமையலறை மற்றும் படுக்கை அறை என்னுடைய 2003 உயில் சொத்து பாகத்தில் உள்ளது என்றும் பிரதிவாதியின் சமையலறை மற்றும் படுக்கை அறை வழக்கு சொத்தில் உள்ளது என்றும் சொன்னால் சரிதான். 2017 உயில் நடைமுறைக்கு வந்ததால் தான் என் பெற்றோர் வசித்த வழக்கு சொத்தில் பிரதிவாதி வசித்து வருகிறார் என்றால் சரியல்ல.

13) வழக்கு சொத்திற்கான வரி விதிப்பு என் தந்தை பெயரில் இருப்பதை சாதகமாக்கி கூட்டு சுவாதீனத்தில் இருப்பதாக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்து உள்ளேன்என்றால் சரியல்ல. நான் வழக்கு சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. என் தந்தை 2017 ல் இறந்த பின்னிட்டு 2023 வரை நான் வழக்கு சொத்தில் பாகம் கோரி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 2017 உயில் உண்மை என்பதால் தான் நீண்ட காலம் நடவடிக்கை எடுக்காமல் இருந்து விட்டு தற்போது பிரதிவாதியின் மீதான காழ்ப்புணர்ச்சி காரணமாக இவ்வழக்கை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல.

14) எதிர்வழக்குரையில் பிரதிவாதி 2017 உயில் இருப்பதாக குறிப்பிட்டு இருந்த நிலையில் அதனை மறுத்து நான் பதில் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2017 உயில் உண்மையானது மற்றும் எங்கள் இருவரையும் கட்டுப்படுத்துவது என்பதால் தான் நான் பதில் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

15) கடந்த 13-01-2017 அன்று என் தந்தை நல்ல மனநிலையில் சாட்சிகள் முன்னிலையில் வழக்கு சொத்தை பொருத்து பிரதிவாதிக்கு ஆதரவாக உயில் ஏற்படுத்தி அது அவரது இறப்பிற்கு பின்னிட்டு நடைமுறைக்கு வந்து விட்டால் அச்சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அதனால் எனக்கு வழக்குமூலமோ , வழக்கு சொத்தில் பாகமோ இல்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**ஒப்பம் /- (மு.ச. ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி